# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-45000032 மின் அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:110:2023 நாள்: 29.03.2023

அன்பார்ந்த தோழர்களே,

## ஊழியர் நலத்திட்டங்களில் முன்னேற்றங்கள்

வங்கியின் லாபத்தில் 3% ஊழியர் நலத்திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகிறது. கடந்த ஆண்டு லாபத்தில் 50 கோடி இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனை ஊழியர் நலனுக்கு பயன்படுத்துவது குறித்து விவாதித்து முடிவெடுக்க ஊழியர் நல நிதியின் கூட்டம் கடந்த 17.03.2023 அன்று மும்பையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஊழியர்கள் சார்பில், அகில இந்திய அமைப்பின் தலைவரும், பொதுச்செயலாளரும் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- ஊழியர்கள் கடனுக்கு காப்பீடு செய்வதற்காக 2022-23ம் ஆண்டு செலுத்திய தொகையில் 15% மானியமாக வழங்கப்படும்.
- UBIREMAS என்ற ஒய்வு பெற்ற ஊழியர்களுக்கான மருத்துவ உதவி திட்டத்தின்கீழ், மருத்துவ உதவி 9வது இருதரப்பு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. இது மிகவும் குறைவு என்பதால், இனிமேல் மருத்துவ காப்பீட்டு நிறுவனங்கள் தற்போது வழங்கி வரும் தொகைக்கு ஏற்ப வழங்கப்படும். மேலும் ஒருவருக்கு ஒரு ஆண்டுக்கு அதிகபட்சமாக ரூ.50,000/- வரை வழங்கப்படும்.
- வழங்கப்படும் ஊதியம் மிகக் குறைவாகவுள்ளதால், வங்கியின் பல பிராந்திய அலுவலகங்களில் மருத்துவர்கள் இல்லாத நிலை உள்ளது. எனவே, மருத்துவர்களுக்கான ஊதியத்தை உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒரே நகரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பிராந்திய அலுவலகங்கள் இருந்தால், ஒரு சில பிராந்திய அலுவலகங்களில் மட்டும் மருத்துவர் நியமிக்கப்படுவர்.
- 2022-23ஆம் ஆண்டில் மருத்துவ காப்பீடு செய்துகொண்ட ஒய்வு பெற்ற ஊழியர்கள் செலுத்திய தொகையில் 5% மானியமாக வழங்கப்படும்.
- குன்னூர், புவனேஸ்வர், அயோத்யா, ஆஜ்மீர், ஜெய்பூர், உஜ்ஜயினி ஆகிய இடங்களில் விடுமுறை இல்லங்கள் திறக்கப்படும்.

வரும் ஆண்டுகளில், ஊழியர் நல நிதிக்கு ரூ.75 கோடி ஒதுக்கும்படியும், இந்தக் கூட்டத்தில் பங்குபெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நமது அகில இந்திய அமைப்பின் சார்பாகக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

தோழமை வாழ்த்துகளுடன்,

(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்